# மும்பை நகரத்தார்



மாதமின்னிதழ் • பக்கம் - 71 மலர் - 1 • இதழ் - 6 • அக்டோபர் 1, 2022


## உலகெங்குமுள்ள வாசகப் பெருமக்களுக்கு,

அன்பான வணக்கங்கள். "மும்பை நகரத்தார்" மின் இதழின் ஆறாவது இதழ் உங்கள் கைகளில் தற்போது இருக்கிறது. மின்னிதழ் தொடங்கி ஆறு மாதங்கள் ஆகிவிட்டது என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

மும்பையில் தற்போது நவராத்திரி சீசன் களை கட்டி இருக்கிறது. சில ஆண்டுகளாக கோவிட் தாக்கத்தில் இருந்ததால் வழக்கமான நவராத்திரி சமயத்தில் ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என்ற கோலாகலம் இல்லாமல் இருந்தது. தற்போது அது மீண்டும் திரும்பியிருக்கிறது.

அழகான, நல்ல வசதிகள் அடங்கிய, நகரின் முக்கியமான இடத்தில் இருக்கும் மும்பை நகரத்தார் விடுதி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மும்பைக்கு சுற்றுலா, வணிக சம்பந்தமாக வரும் நகரத்தார்கள் மற்றும் நகரத்தார்கள் அல்லாதவர்கள் இந்த வசதியை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். நகரத்தார்களுக்கு முன்னுரிமை என்பதை மனதில் கொள்ளவும்.



வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் எங்களது நன்றிகள்.

அன்பான வணக்கங்களுடன்.....

**சேதுராமன் சாத்தப்பன்**

**மற்றும் ஆசிரியர் குழுவினர்**


Shrieenidhi Diamonds
Your Companion for Every Occasion
ELEGANT BEAUTIFUL DAZZLING
Jewellery That will Get You Noticed
சென்னையில் செட்டிநாடு வைர நகைகள்,
கருத்துரு, ஜோடிப்பு தாலி வகைகள்,
தங்க ஆபரணங்கள்
உடனடியாகக் கிடைக்கும்.
PAN INDIA DELIVERY AVAILABLE
Old No. 5, New No. 11, Bangaru Ammal Street, Mylapore, Chennai - 600 004.
Mob: 044-4867 7311 / 750 6990 140
Website: www.sdjewellery.in
Mail ID: mac@sdjewellery.in
CODE OF ORIGIN DE BEERS
AUTHORISED JEWELLERY
CODE OF ORIGIN™ DE BEERS is a Trade Mark of De Beers Group

# My Monthly Musings



It is an unstated truth that , we humans, don't change when we are given options.

But we change once we realise that there is no other option.

Sometimes it is very hard for us to move on.

But once we move on ,we realise that was the best decision we have made.

Let us keep moving.

When our mind is negative, a situation becomes a problem.

When our mind is balanced the situation becomes a challenge.

But when our mind is positive the same situation becomes an opportunity.

We should understand and appreciate, it is all a mind game.

It will be really nice if we can find our own faults.

It will be better if we could correct these faults ourselves.

But it will be really great if we can accept those faults as our own.

In our lives right things may not be possible always.
Also the possible ones may not be right always.
But we will always be right if we are true to our hearts.

---

We need to remember that lovely times of life will not return but the lovely relations and the memories of Lovely People will stay in our hearts forever.
Let us build and nurture relationships.

---

We should never change our originality for the sake of others.
Because no one can play our role better than us.
So let us be ourselves.

---

Our lives will be blissful if
1. We are able to think beyond the " present"
2.We are able to think beyond I, me and myself.
3. When we are able to get " self" out of the way.



**PL.Palaniappan**

***BE from REC Trichy and MBA from XLRI, Jamshedpur.***

***Native of Okkur. Wife Mrs. Jayanthi. Belongs to Vairavan Kovil, Theyanar Vagappu. Currently CEO of Mahindra Waste To Energy Solutions Limited and Past president of BNSCA***

Government Authorised Agent for Post office Investments.
100% Security. No TDS

Life Insurance Corporation of India

All Mutual funds

PAN card center

உலகத்தின் எந்த பகுதியில் இருந்தாலும், உங்களுடைய முதலீட்டிற்கு எங்களை அழைக்கலாம்.

Contact:
THEIVANAI RAJPANDIAN
98401 26228
96770 68951

our YouTube channel
SAVINGS THEIVANAI

From anywhere in the world you can contact us for your investments

# மும்பையில் நகர விடுதி

## தங்குவதற்கு நகரத்தார்களுக்கு முன்னுரிமை

இரண்டு பேர் தங்க
ஏ.சி. ஒரு நாள் வாடகை
நகரத்தார்களுக்கு
ரூ.800 மட்டுமே



தொடர்புக்கு
**77770 27334**
**திரு. பழனியப்பன்,**
மேனேஜர்

# நலம் தரும் நவராத்திரி

அகிலாண்டேஸ்வரியின் அற்புத திருநாள்
ஆதிபராசக்தியை கொண்டாடும் திருநாள்
இச்சாசக்தி இன்பங்களை வழங்கும் திவ்யநாள்
ஈடில்லாத அன்னையை நமஸ்கரிக்கும் நன்னாள்
உலகத்தை ஆளும் மகாசக்தியின் மகிமை வாய்ந்த நாள்
ஊழ்வினையை அகற்றி உற்சாகம் அளிப்பவளின் உன்னத நாள்
எட்டு திக்கும் நீக்கமற இருப்பவளின் பொன்னாள்
ஏட்டு அறிவளிக்கும் சரஸ்வதிக்கு பூஜை செய்யும்
புண்ணியநாள்



ஐஸ்வரியங்கள் தரும் மகாலெட்சுமியின் மகத்தான நாள்
ஒற்றுமையுடன் முப்பெரும் தேவியரை வழிபடும்
வரமிகுந்த நாள்
ஓம்சக்தியை நம்பினோருக்கு மகாசக்தியை கொடுக்கும்
நவநாள்
அஃதே நலம் தரும் நவராத்திரியில் மகேஸ்வரியை
மனதார துதிப்போம்
ஓம் சக்தி பராசத்தி

அகில உலகத்தில் அனைத்தையும் காத்து அன்புடன் அருள்புரியும் அன்னை சக்தி தேவியின் வழிபாடு நவராத்திரியாகும்.தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் மகிஷன் என்னும் அசுரன் கொடுமைகள் புரிந்தான். அசுரனை அழிக்க பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரின் சக்திகளில் இருந்து தோன்றியவளே மகாசக்தியாகும்.சக்தி இல்லையேல் சிவம் இல்லை. அசையா பொருளை அசைக்கும் சக்தி கொண்டவள் அம்பிகை. எல்லா தெய்வங்களுக்கும் ஆதார சக்தியாய் விளங்குபவள். எல்லையில்லாதது அன்னையின் சக்தியாகும் .ஒன்பது நாட்கள் அசுரனை எதிர்த்து போராடி பத்தாம் நாள் அவனை வெற்றி கொண்டு மகிஷாசுரமர்த்தினியாக அருள்புரிந்த நிகழ்வே நவராத்திரியாக கொண்டாடப்படுகிறது.நவராத்திரி விழா புரட்டாசி மாதத்தில் வளர்பிறை பிரதமை திதியில் தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும்.பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாப்படுகிறது. முதல் மூன்று நாட்கள் தேவியை துர்க்கையாகவும் அடுத்த மூன்று நாட்கள் லட்சுமியின் வடிவமாகவும் கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபாடு செய்யப்படுகிறது.

நவராத்திரியில் இல்லங்களில் கொலு வைத்து அம்மனை அலங்கரித்து தேவியை வணங்குவது மிகச் சிறப்பு

வாய்ந்ததாகும்.ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணாலான பொம்மைகளை வைத்து பூஜிப்பவருக்கு அம்பிகை சகல சௌபாக்கியங்களை வழங்கி வருகிறாள்.மக்கள் ஆன்மிக சிந்தனைகளை வளர்த்து தெய்வத்துடன் இரண்டற கலக்க வேண்டும் என்னும் தத்துவத்தை கொலுப்படிகளும் அதில் வைக்கப்படும் பொம்மைகளும் உணர்த்துகின்றன.முதல் படி ஓரறிவு கொண்ட மரம்,இரண்டாம் படி ஈரறிவு கொண்ட சங்கு,நத்தை ஆமை போன்ற பொம்மைகள் மூன்றாம் படி மூன்றறிவு கொண்ட எறும்பு, கரையான் நான்காம் படி நாலறிவு கொண்ட நண்டு வண்டு பறவை உயிரினங்கள் ஐந்தாம் படி ஆடு மாடு நாய் சிங்கம் போன்றவை ஆறாம் படி ஆறறிவு கொண்ட மனித பொம்மைகள் ஏழாம் படி ரிஷிகள் குருமார்கள் எட்டாம் படி தேவர்கள் ஒன்பதாம் படி தெய்வங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும்.

கொலுவிற்கு வருகிறவர்களுக்கு தாம்பூலம் பிரசாதம் கொடுக்கலாம் காலை மாலை இரு வேளையும் பூஜை செய்ய வேண்டும். லலிதா சகஸ்ரநாமம் லலிதாம்பாள் சோபனம் அபிராமி அந்தாதி சௌந்தர்ய லஹரி என அனைவரும் நவராத்திரி ஒன்பது நாட்கள் பாராயணம் செய்யலாம்.நவராத்திரியின் பொழுது நவதானியங்களை தேவிக்கு வைத்து பூஜை செய்வதும் நவதானியங்களை ஒரு பாத்திரத்தில் இட்டு வளர்க்கும் வழக்கம் இருந்து வருகிறது. கொலுவில் ஊஞ்சலில் தெய்வங்களை வைத்து நமஸ்கரித்தால் இறைசக்திகளின் பரிபூரண கடாட்சம் கிடைக்கும்.நவராத்திரியை கோவில்களில் திருவிழாவாக கொண்டாடுகிறார்கள். கோவில்களிலும் கொலு வைக்கப்படுகிறது.நடன நிகழ்ச்சி இன்னிசை கச்சேரி நடைபெறுகிறது. விஜயதசமியன்று கோவில்களில் இருந்து குதிரை வாகனத்தில் தெய்வங்களை அலங்கரித்து காட்டுக்குப் புறப்பட்டு சுவாமிகளை அம்பு போட வைப்பர்.வன்னி மரத்திலிருக்கும் அசுரனைக்

கொன்று வெற்றி பெற்றதாக ஐதீகம்.நகரத்தார்களில் ஆண்பிள்ளைகளை வன்னி மரம் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று அம்பு போட வைப்பார்கள். அதற்காக திருமணத்தின் பொழுது சீருடன் வெள்ளியில் செய்த அம்பை கொடுப்பார்கள்.விஜயதசமி முதல் நாள் சரஸ்வதி பூஜை அலுவலங்கள் தொழிற்சாலைகள் வீடுகள் தோறும் மிகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. கலைகளுக்கு அரசி சரஸ்வதியை

கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்க புத்தகங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான பொருட்களை பூஜையில் வைத்து விட்டு மறுநாள் விஜயதசமியன்று பூஜை செய்து தொடங்குவர்.விஜயதசமியன்று குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து சென்று பாடம் படிக்க ஆரம்பித்து வைப்பதாக வழக்கம் இருந்து வருகிறது. இதை வித்யாரம்பம் என்று சொல்வர். நவராத்திரி சமயத்தில் பெண்களும் குழந்தைகளும் மிகுந்த. உற்சாகத்துடன் இருப்பர்.விரதமிருந்து நவதானிய சுண்டல்

சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றை சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.நவராத்தியின் பொழுது அன்னையின் வழிபாட்டில் லயித்து இருப்பதால் தேவையற்ற எண்ணங்கள் இல்லாமல் தேவியோடு ஒன்றிப் போய் ஆத்ம திருப்தியுடன் இருக்க முடிகிறது .பெண்களும் குழந்தைகளும் கோவிலுக்கு போய் அம்மனை தரிசிப்பதிலும் தாம்பூலம் கொடுப்பதிலும் தாம்பூலம் பெற்றுக் கொள்வதிலும் கலை நிகழ்ச்சிகளை கண்டு களிப்பதிலும் கலை நிகழ்ச்சியில் பங்கு கொள்வதிலும் மகிழ்ச்சி அடைகின்றனர். நவராத்திரி சமயத்தில் வீட்டுக்கு வருகின்ற எல்லாப் பெண்களையும் அம்பிகையின் அம்சமாக பார்க்கலாம்.அதனால்

தான் வயதான சுமங்கலிகளுக்கு சுவாசினி பூஜை சிறுவர்களுக்கு வடு பூஜை சிறுமிகளுக்கு கன்யா பூஜை விஜய தசமியன்று செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. அம்பிகையை சரண் புகுந்தால் வரம் பெறலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த நவராத்திரியை பக்தியோடு வழிபடுகிறவர்களுக்கு வளமை உண்டாகிறது.

மறவாது நினைப்பவர்களை தேவியானவள் காக்கின்றாள். ஆகையால் நவராத்திரி ஒன்பது நாட்களும் ஆதிபராசக்தியை வணங்கி சகல சௌபாக்கியங்கள் பெற்று பெரு வாழ்வு வாழ்வோம்.



**Written by:**

**Meyyammai Kasiviswanathan**
B.A., Economics
Native: Karaikudi
Passionate in writing drawing kolams preparing cross word puzzle writing tamil poems

**மும்பை நகர விடுதி**



**தொடர்பு கொள்ள**

மும்பை நகர விடுதி மேனேஜர்
**திரு. பழனியப்பன் ராமநாதன்**
மொபைல் நம்பர்:
**77770 27334**

# FREIGHTBRIDGE LOGISTICS PVT. LTD.

FBL

*An Endeavour to Connect Ends*

17 YEARS 2005-2021 Anniversary

**CORPORATE OFFICE**

Neelkanth Business Park, C-707, 7th Floor, Vidyavihar (West), Mumbai - 400 086.
Tel.:+91-22 6722 6722 | Fax:+91-22 6722 6721 |
Email: info@fblindia.in

## WE OFFER

- LCL CONSOLIDATION SERVICES (IMPORT & EXPORT)
- MULTIMODAL TRANSPORTATION SERVICES
- COMPLETE LOGISTICS SOLUTIONS
- 3PL & 4PL LOGISTICS
- OCEAN FREIGHT
- AIR FREIGHT



**OUR BRANCHES**

AHMEDABAD II BARODA II MUNDRA II BANGALORE II CHENNAI
COIMBATORE II DELHI II HYDERABAD II MUMBAI II LUDHIANA II TUTICORIN II TIRUPUR

freightbridgelogistics www.fblindia.in freightbridge




# A chilling experience to share

## in Bogota, Colombia

It could have gone totally awry . Thanks to wonderful people, it left a lasting impression.

Midway through Latin America business trip, I landed early morning in Bogota , Colombia . Morning went just as planned.

I was scheduled to visit Indian embassy at 2 PM . After lunch , I took a taxi from the Hotel to the Indian Embassy . The embassy was housed on the 3rd floor of a commercial building .





Weather was very pleasant , Sun was bright and city was green all around .

The road leading to the Embassy building was crowded and a policeman was heralding the vehicles to move fast .

My taxi stopped near the building and the driver indicated the charge . As my wallet was in the bag, I kept my mobile phone on the seat and took the purse to pay him . While the driver was returning the change, police man gestured to move fast . In a jiffy , I took the change & left the taxi .

Only a few seconds later I realised my mobile is missing and I had left it on the seat . I yelled and ran towards the car but just in front of my




eyes , the taxi sped away.

The building security saw me running towards the car . With my broken Spanish I tried to explain that I left my mobile in the car

I used to rely on google translate to communicate but with no phone in hand , communication became all the more difficult

I was completely at a loss . I requested the security to call my phone number. He gave his phone . I dialled my number but unfortunately his phone did not have the international calling facility.
I immediately ran towards the reception and requested them Indian Embassy.

Receptionist did not understand a word and insisted I give the verification - passport document . I was panting and gave the passport .

Tried to explain my mobile was missing and desperately needed to call . She could not understand and gestured to wait while she was checking with the Indian embassy for clearance .

Time was running out and there was no way I could track the taxi or the driver.
No phone and not able to communicate- I felt that life was falling.

Every contact , address , tickets and all communication were in the phone . I only remember Meena's & my father's mobile numbers . In the middle of the business trip , it looked very scary .

Heart was pounding but no help was on the sight . After almost 10 minutes , I got the pass and the security escorted me to the lift.

Out I came of the lift and ran towards the embassy door. The receptionist asked me to enter the visitors book. I pleaded with him to immediately connect with Abhishek Avi , 2nd secretary , whom
I had met during my previous visit ( I always make it a point to visit Indian Embassy in

every country . One does not know when you need their help . It is always better to connect during good times )

He came at once , understood the gravity and gave his phone . I called my WhatsApp number , ring was going but no one was answering

Then I called my cell number , again ring was going but no one answered . Several thoughts went through my mind . While I was preparing for the worst , I had a glimmer of hope based on the small interaction I had with the driver during transit .

After 6 or 7 attempts, finally when nothing seemed probable, phone call was picked and the person answered Holiday Inn .

Rush of adrenaline through my body and tears started rolling down my cheek . I knew the phone is safe and driver has deposited the phone in the hotel ( I later learnt from him that when he parked the car , he noticed the phone and thinking I may be staying in the hotel from where I boarded the car , he came out of his way to return the phone)

Abhishek immediately arranged for the embassy car and asked me to go to the hotel . I requested hotel receptionist to ask the car driver to wait for few minutes .

I thanked the security Mr Ortega who offered first help and then on the embassy car dashed to the Hotel. There my hero Carlos, the taxi driver was waiting for me.

I hugged him and thanked him profusely. But for his help , it would have been extremely difficult to continue the business trip
People like him make us believe in humanity and good Karma .  Colombia has left a lasting impression on me.

Thank the Almighty for His kindness .



**R Manikantan**

*Vice President - KEC International*


*Vice President - BNSCA*

*Native : Devakottai*

*Kovil :  Illayathangudi ,*

*Perumarudur-udaiya*




www.smaartdiamonds.com
Smaart® Diamonds
Traditonally Modern Jewellery
Timeless
like Love itself!
Exquisite Designs • Excellent Craftmanship • Enduring Value
Smaart Diamonds
F1, Dattatreya Apartments 25,
Giri Road, T Nagar, Chennai 600 017
+91 94440 11748
+91 80560 41984



கவிதை

# வானம் அழுகிறது!

கவிஞர் அரியக்குடி மெய்யப்பன்

வானம் அழுகிறது!
ஆமாம்!
வானம் அழுகிறது!
வடித்த நீராய்,
குடிநீராய்த் தந்தும்
எடுத்து வைக்காத
மானுடன்
குடிநீருக்காய்

அலைகின்றான்!
மடுவிலும் மண்ணிலும்

ஓடிய போதும்
பிடித்து வைக்காத
மானுடன்
துடித்துச் சாகிறான்

குடிநீருக்காய் !
ஆமாம்,
வானம் அழுகிறது!
தவறவிட்ட தண்ணீர்
தாவிக் கலந்தது
கடலெனும் காதலனுடன்!
தன்வசம் இழந்து
அவன் வசமாகி,
உப்பாய்ப் போனது!
தன்மை இழந்து,
மென்மையிழந்து,

தப்பாய்ப் போனது,
உப்பாய் ஆனது!
தப்பாய் ஆக்கின
உப்பைப் பிரித்துக்
கடலின் தலைவன்
கதிரவன் என்பான்
மென்மை படுத்தி,
செம்மைப்படுத்தி,
மீண்டும் தந்தான் நந்நீராக!
மீண்டும் மானுடன் கோட்டை
விடுகிறான்!

மீண்டும் நீரை
வேண்டி அலையவே!
வானம் அழுகிறது!
ஆமாம்,
வானம் அழுகிறது,
மானம் கெட்ட
மனிதனை நினைத்து!
கூனல்விழுந்த மதியினைக்
கொண்ட
கோணங்கி மனிதனை
நினைத்து!



**அரியக்குடி மெய்யப்பன்**

மும்பையில், இந்திய சுங்கத் துறையில் முக்கிய பதவிகள் வகித்த அவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர். அமுதசுரபி, இலக்கியச்சோலை போன்ற இதழ்களில் கவிதைக்காகப் பரிசு பெற்றவர். ‘தென்னரசு’ அச்சு இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.





"For better career prospects and bright future send your profile to"

# Busisol Sourcing (India) Pvt. Ltd.

## HR & Management Consultants

Website : www.busisol.net

Corporate Identity Number : U72900MH2004PTC144759

Registered office : 401 Shiv Ashish, Plot No. 10, 19th Road, Chembur, Mumbai 400 071.

Tel : 022 6117 7600 / 6117 7611 Email: appan@busisol.net

**Chennai Branch :**
#33A, Fourth Floor, Singapore Plaza,
164, Linghichetty Street, Parrys,
Chennai 600 001. Tel : 044 6548 7111 118,
Email: Chennai@busisol.net

**Bengaluru Branch :**
Monolithic Apartment, No CS-1, 2nd Floor,
Sampige Road, Near Adigas Hotel, 2nd Main,
Malleshwaram, Bengaluru 560003.
Tel: 080 6090 9013 18 Email: bangalore@busisol.net

# மும்பை பருவமழை

கவிதை அரு.சிவகாமி இராமனாதன்

மழைத்துளி மண்ணை நனைத்தது
மும்பை மாநகரம் குளிர்ந்தது
மடைதிறந்த வெள்ளமென வான்முகில்
படபடவென நீரைப் பொழிந்தது

சலசலவென குளிர்ந்த காற்று
தடதடவென மின்னல் கீற்று
சடசடவென விழுந்தது நீர்த்துளி கட்டுப்பாடற்று

சிறு துளிகள் சிறப்பாக சிரிப்புடனே சிதறியது
பரபரவென நிலத்தின் மேல் பரவலாகப் படர்ந்தது
கணப்பொழுதில் தட்பவெப்பம் தடுமாறி நின்றது
மனதில் கவிதைமழை மெதுவாக மலர்ந்தது

விண்ணில் இருந்து வடிந்த நீர்
மண்ணைத் தழுவி மகிழ்ந்தது
காதலுற்ற இருஉள்ளம் கலந்ததுபோல்
மண்ணோடு இரண்டறக் கலந்தது
மணமுடித்த மங்கையைப்போல்... மண்
வாசம் பெற்று மணத்தது
விண்ணோடு நேசம்கொண்டு ஈரமுற்று சுகித்தது

வானம் பார்த்த பூமியாக
பல ஊர்கள் மழைக்கு ஏங்கிக் காத்திருக்க...
மும்பை மாநகரில் பருவமழை
வருடந்தோறும் வரமாக கிடைத்திருக்க...
வருண பகவானின் வரப்பிரசாதம்
வளம் மேலோங்கிடவே நாளும்
நன்றி உரைப்போம் நாம் அனைவரும்!

எழுத்தாக்கம்:



**பாவாக்கம்:**

**AR. Sivagami Ramanathan.,** B.E., H.D.S.E.,
W/O Ramanathan. M
Native: okkur
Born at Konapet.
Residing at Navi Mumbai.
For more details about kumbabhishekam tamil kavithaigal ,
visit: தமிழ் சுனை (Tamil sunai) YouTube channel
https://youtube.com/channel/UCEgZYMj0JCmWHG_omqqz6Cw

**NRK Freight Forwarder Private Limited**

WE PROMISE • WE DELIVER

10th year ANNIVERSARY



## WHO ARE WE

Started in the year of 2012, we have established ourselves as a trustworthy Logistics provider in the industry.

We possess a talented & experienced team of professionals who have a better understanding to provide proficient solutions that helps us to establish excellent relations with customers for mutual developments by sharing technically and commercially.

## MILESTONES

**2012**
Air Freight, Sea Freight, Packaging

**2014**
Warehousing, Brokerage, Door to Door

**2016**
Cross trading, Supporting to the start-up companies

**2021**
Courier

## SERVICES

- Sea Export & Import • Air Export & Import
- Cross Trading • Insurance • Trading Activities
- Ware Housing (Private / Customs)
- Door to Door • International Courier Services

LICENSED MTO | MEMBERS OF 5star JCTRANS

## BUSINESS ASPECTS

**Principles**
Understanding what people need on business aspects and delivering the same

**Marketing**
Attracting attention and building demand on what we have (on services basics)

**Sales**
We will create customers by giving genuine services and that will lead to improve our sales by referring our company name to a new customer or known persons and other customers also

**Value Delivery**
Giving your customers what we have promised and ensuring that they are satisfied in all aspects

+91 98412 73795 | +91 044-2241 0776 | maiyappan@nrkfreight.com | www.nrkfreight.com

No.4/13/A, 2nd Cross Street, New colony , Chrompet , Chennai - 600 044

**Register office:** No.1, Tank Street 1st cross, Lakshmipuram, Chrompet, Chennai, 600 044, Tamil Nadu, India

**ALSO AVAILABLE IN WHATSAPP & LINKEDIN**



# அறிவோம் ஆழ்வார் பாசுரம்

**அறிவோம் ஆழ்வார் பாசுரம் எனும் இந்தப் பகுதியில் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பதிகத்தின் பாசுர விளக்கங்களைப் பார்த்து வருகிறோம். அதில் இன்று நாம் காணவிருப்பது கடைசி இரண்டு பாசுரங்கள்.**

**அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர் கோன்அபி மானதுங்கன்**
**செல்வனைப் போலத் திருமா லேநானும் உனக்குப் பழவடியேன்**
**நல்வகை யால்நமோ நாரா யணாவென்று நாமம் பலபரவி**
**பல்வகையாலும் பவித்திர னேஉன்னைப் பல்லாண்டு கூறுவனே**

அல் வழக்கு என்பது தேகமே ஆத்மா என்று நினைப்பதும், பகவானைச் சார்ந்து பகவானுக்கு சேவை செய்திருக்க வேண்டிய ஆத்மாவை சுதந்திரமானவன் என்று நினைப்பதும், பகவானிடம் பௌதீகப் பலன்களை வேண்டுவது போன்ற செயல்களையும் குறிக்கும். இது போன்ற எந்தக் குறைகளும் இல்லாதவர்கள் திருக்கோட்டியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தலைவனும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அபிமானதுங்கனுமான செல்வ நம்பியைப் போன்றே நானும் உனக்குப் பழமையான தொண்டன் என்கிறார் ஆழ்வார். நல்வகையால் நமோ நாராயணாவென்று நாமம் பல பரவி என்பதிலும் ஒரு ஆழ்ந்த அர்த்தம் உள்ளது. அதாவது, நமோ நாராயணாவென்று நல்வகையால் கூறுவேன் என்கிறார், இதுவரை பிரயோஜனம் கருதி கூறியிருக்கலாம், இனி நல்வகையால் நாமம் பல சொல்லி பல வகைகளாலும் தூய்மையான உன்னைப் பல்லாண்டு கூறுகிறேன் என்கிறார் ஆழ்வார்.

ஆழ்வார் பாசுரத்தில் செல்வநம்பி என்னும் திருமால் பக்தர் இடம்பெற்றுள்ளார் என்றால் அவரைப் பற்றிச் சற்றே அறிதல் அவசியம். அவரே பாண்டிய மன்னன் வல்லபதேவனுக்கு ஆஸ்தானப் ப்ரோஹிதர், ஆன்மீக ஆலோசகர். தனக்கு எழுந்த ‘மெய்ப்பொருள் யாது’ என்னும் ஐயத்தை தெளிவு படுத்த மன்னன் அறிவித்த பொற்கிழி பரிசும் நடத்திய மாபெரும் மாநாடும் செல்வநம்பியின் கூற்றுப்படியே. அவரது சஞ்சலமற்ற பக்தி பெரியாழ்வாரையே வியக்கச் செய்தது. அதனால் தான் அவரைப் பற்றி தனது பாசுரத்தில் குறிப்பிட்டு,

அவரைப் போன்ற தொண்டன் நான் என்று கூறுகிறார்.

**பல்லாண் டென்று பவித்திர னைப்பர மேட்டியை சார்ங்கமென்னும்**
**வில்லாண் டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டு சித்தன் விரும்பியசொல்**
**நல்லாண் டென்று நவின்றுரைப் பார்நமோ நாராய ணாயவென்று**
**பல்லாண் டும்பர மாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே**

இந்தப் பதிகத்தின் கடைசிப் பாசுரமான இது, பலஸ்ருதியாகும். பரிசுத்தமானவனும், பரம பதமான வைகுந்தத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டவனும், சார்ங்கம் என்னும் வில்லை கம்பீரமாக ஆளக்கூடியவனுமான எம்பெருமானை பல்லாண்டு என்று விஷ்ணு சித்தரான பெரியாழ்வார் விரும்பி உரைத்த பாசுரத்தினை பாடுவதற்கு இதுவே நல்ல ஆண்டு நல்ல காலம் எனக்கருதி நமோ நாராயணாயவென்று நவின்று உரைப்பவர் பல்லாண்டு காலம் பரமாத்மனான ஸ்ரீமன் நாராயணனை சூழ்ந்திருந்தது அவருடைய திருத்தலத்திலேயே பாடக்கூடிய பேறு பெறுவர் என்று அழகாக முடிக்கிறார் ஆழ்வார்.

**இத்தகையதொரு பலனைக் கேட்போர் நமோ நாராயணாவென்று நவின்றுரைக்காமலும் போவாரோ?**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.




## மீனாள் மணிகண்டன்

(கணவர்: மணிகண்டன் ராஜேந்திரன்)
இரு மொழி எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், ரங்கோலி கோலக்கலைஞர், பக்தி இலக்கிய சொற்பொழிவாளர்.
இவரது சொற்பொழிவுகள் https://www.youtube.com/channel/UCEGx-W7KF9Wm9lJk__ia_z1Q என்ற youtube channel லில் உள்ளன.



ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி
மாவட்டங்களில் வீடுகள், மனைகள்,
கமர்ஷியல் காம்ப்ளக்ஸ்
வாங்க, விற்க
கைராசியான நிறுவனம்

## கண்டனூர் AL. GANAPATHY

## Sai Meena Real Estate

No. 22, Lakshmi Vinayagar Nagar,
Sakthi Nagar East, Nethajipuram,
N.K. Palayam, Coimbatore – 641 033.
Phone: 97868 86849, 89460 24940.



# செட்டிநாட்டுச் சேலை முடியும் கலை

வணக்கம்,

அள்ளித்தெளித்தாலும் கோலம் தான். அழகாய்ப் போட்டாலும் கோலம்தான் என்று ஒரு சொலவடை நம்மில் உண்டு.

ஆனால் அள்ளித் தெளிப்பதற்கும் அழகாய் போடுவதற்கும் உள்ள மலை அளவு வித்தியாசம் தான் நம்மை எங்கும் தனிப்படுத்தி காண்பிக்கும்.

எந்த வேலையிலும் தனிக் கவனம் செலுத்தி சிரத்தையுடன் சிறப்பாய்ச் செய்யும் கெட்டிச் சமர்த்திகளான நம் ஆச்சிமார்களின் தனித்திறமைகளில் சேலை முடிவதும் ஒன்று.

கைத்தறி சேலை எனினும் கண்டாங்கி சேலை எனினும் சேலை ஓரத்தில் வரும் பெரு முடிச்சிட்ட நூல்களை பொறுமையுடன் சிறு சிறு பகுதிகளாக சிக்கல் எதுவும் இன்றி பிரித்து சிறு சிறு முடிச்சுகளாக பிரிந்து விடாமல் அழகாக நெருக்கமாக முடிச்சிடுவதே சேலை முடிவது ஆகும்.



ஒற்றை முடிச்சு, இரட்டை முடிச்சு, கோபுர முடிச்சு என இதிலேயும் வகைகள் உண்டு.

சித்திரமும் கைப்பழக்கம் என்பதற்கிணங்க முடிச்சு போட்டு பழகப் பழக மிக எளிதாய் இந்த வேலையும்

அனைவருக்கும் கைவரும்...

அழகாய் முடி போட்ட சேலைகள் கட்டும்போது தனி அழகையும் தரும், மற்றவர் கவனத்தையும் ஈர்க்கும்..

காலப்போக்கில் உண்டாகி வரும் நிறைய நவீன உத்திகளை கையாண்டு சேலையின் நிறத்திற்கு ஏற்ப கிடைக்கும் பட்டு நூல்கள் , தங்க நிற மணிகள்,





பலவண்ணப் பாசிகள்
கொண்டு மிக நேர்த்தியாக
இப்போது சேலை
ஓரத்தில் முடிவது பெருகி
வருகிறது....

ஆந்திரா, கர்நாடகா
மாநிலங்களிலும் இந்த
வேலை மிகவும்
பிரசித்தம் ..

கர்நாடகாவில் குச்சு கட்டுவது

என்று சொல்வர்.

எந்த ஒரு வேலையும் கலைநயத்துடனும் பொறுமையுடனும் அழகுணர்ச்சியுடன் செய்யும் போது கிடைக்கும் மன மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் ஈடு இல்லை ...

தனக்கு மட்டும் இன்றி வேண்டும் என்று கேட்பவர்களுக்கு செய்து கொடுத்து பொருளும் ஈட்டலாம்...

அழகை ஆராதிக்காதவர்கள் யாரும் உண்டோ இந்த பூ உலகினில்...

எந்தவித செலவும் இன்றி ஊசி நூல் கூட தேவை இன்றி சேலையில் வரும் நூலாலேயே இத்தனை அழகை கூட்ட முடியும் என்றால் ஆச்சிமார்களின் கலைநயத்தை கட்டாயம் பாராட்டி ஆக வேண்டும் தானே......

நன்றி!!



**Deivanai Palaniappan,**

*M.A., (w/o.V. Palaniappan - TCS) native of Karaikudi.*

*Her hobbies include being a YouTuber, and she is interested in artwork. Also taking classes for Professional Mehendi and embroidery.*

*Contact number is - 96191 08487.*

*Her youtube channel link - https://youtube.com/channel/UCnrnzXNaKCkfJ2ZGxMIbA1w (Art my life by Deivanai Palani). This channel has 25,000 subscribers.*



May everyone in the world be happy

# A Good rest house in Palani for devotees on a pilgrimage



**Palaniappa Chettiar and Meenakshi Aachi Viduthi** is a rest house built, not for profit in Palani and founded by Thiru Palaniappan, who has created a fund source from his income towards future administration of the Viduthi.

There is Annadhanam at the premises on first Monday and on Kiruthikais of every month. Donation for Annadhanam for Birthdays and wedding anniversaries of parents and children of your family is welcome from all devotees and 80G Income Tax exemption available for the same.

Manager of the Rest House is Thiru A. Annamalai, Phone: 919865230277 (Whatsapp) can be contacted for any queries regarding Palani temple darshan. No advance payment required for staying in the rest house.

## Special features of the Rest house:

- 300 metres from PathaVinayagar temple. The resthouse is located in the street next to the street where the girivalam takes place.
- Parking facility inside the rest house.Auto or Car pickup and drop facilities can be arranged.
- Presence of solar water heater for 24 hour water facility, Purified drinking water facility.
- Generator and UPS backup on power outage. Bigger rooms are available for large groups of devotees to stay.

**Rent**

**1. Double room A/C : Rs 850 with additional bed at Rs 150**
**2. Double room non AC : RS 600 with additional bed at Rs 100**

**Address:**

**Pazha. Se.Palaniayappa Chettiyaar Meenachi Aachi Annadhana Viduthi**
**102. East Street, IdumbanSannidhi, Itteri road,**
**Ponni's Lodge behind, Adivaaram Palani-624601**
**Website: www.cpviduthi.com** **Email: cpviduthi@gmail.com**

## சங்கச்சுரங்கம்

# புகழ்

என் ஆயா (உலகம்பட்டி வள்ளியம்மை ஆச்சி) அவ்வப்போது சொல்லும் சொலவடை, "நல்ல பேரு வாங்க நாளாகும்.. நாரப்பயன்னு நாலு நிமிஷத்துல பேரு வாங்கிறலாம்". உண்மை. நல்லவன் எனும் பெயர் பெறுவது என்பதே கடினம் அதிலும் வாங்கிய பெயரை தக்கவைத்து கொள்வது அதனை விட கடினம். ஓரிரவில் புகழ் (overnight fame) பெறலாம், பேர் வாங்கலாம், ஆனால் அது நிலைக்குமா என்பது சந்தேகமே. அப்படி வரும் புகழ், தற்காலிகமானது Facebook லைக் போன்றது. பேருந்தில், இரயிலில் பயணம் செய்யும் போது நான் பார்த்த பலர், முகநூலில் பார்க்கும் அணைத்து புகைப்படங்களுக்கும், காணொளி கட்சிகளுக்கும் லைக் வாரி வழங்குவார்கள். காசா, பணமா, இரண்டு சொடுக்கு அவ்வளவுதானே வேண்டும் லைக் பண்ண?



திஙர் புகழ் சந்தேகத்துக்குரியது. ரவுடி ரங்கனும் பில்லாவும் புகழ் பெறக்கூடும். ஆனால் அது மாசு உள்ள புகழ். இதற்காக சந்ததிகள் வசை பாடுமே தவிர, இசை (புகழ்) பாடாது. ஒருவர் சொத்து பிரிக்கும் முந்தைய நாள் இரவில், ஒரு பலா மரம், தன் தம்பிக்கு பிரிந்து விட கூடாது என மரத்தையே வெட்டிய கதை உண்டு. ஆனால் விதி வலியது. சொத்து பிரிக்க சீட்டு குலுக்கி போடும் போது வெட்டியவருக்கே பலா மரம் பிரிந்தது. அந்தோ பரிதாபம் மரம் தான் இல்லை.

மாசற்ற புகழ் மட்டுமே கொண்டாடப்படும், நிலைத்து நிற்கும். அப்படி ஒரு கதை தான் காளிங்கராயர் கதை. அதிகப்படியான பவானி ஆற்று வெள்ள நீரை அணை கட்டி மேடான பகுதிக்கு தண்ணீரை திருப்பி, நொய்யல் ஆற்றுடன் இணைக்க கி.பி.1282ல் கட்டப்பட்டது காளிங்கராயன் வாய்க்கால். உலக அளவில் மிகப் பழமையான பாசன வாய்க்கால் என்ற பெருமை பெற்றதாகும். இந்த வாய்க்காலை வெட்டி அணையை கட்டியவர் காளிங்கராயன், அதனாலேயே அவர் பெயராலேயே அழைக்கப்படுகின்றது. 12 ஆண்டுகளானது இதனை கட்டி முடிக்க. காரணம், இவ்வாய்க்காலின் நீளம் 90 கிலோ மீட்டர்.

இவை அனைத்தையும் விட சிறப்பு இவர் செய்த சத்தியம். இவ்வளவு பெரிய அணையையும் சொந்த செலவில், அனைத்து பணிகளையும் செய்து இவர் முடிக்கும் தருணத்தில் யாரோ ஒருவரிடமிருந்து ஒரு சொல் வருகிறது, இவர் இவ்வாய்க்காலை ஏற்படுத்த காரணம் சுய நலத்திற்காக, ஊருக்காக என்பது ஏமாற்று வேலை என்று. அன்று அவர் செய்தார் சத்தியம் “நான், எனது சந்ததி

என்று யாரும் எக்காரணத்திற்காகவும் இந்த வாய்க்கால் தண்ணீரை பயன்படுத்தமாட்டோம் என்று. அதோடு நில்லாமல் கனகபுரத்தில் இருந்து படை பரிவாரங்கள் தன் சந்ததிகளுடன் பொள்ளாச்சி அருகே உள்ள தற்போது ஜமீன் ஊத்துக்குளி என அழைக்கப்படும் பகுதிக்கு சென்று விட்டார்.

ஆனாலும் அவர் புகழ் இன்றும் நிலைத்து நிற்கின்றது. இன்றும் ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் முளைப்பாரி எடுத்து வந்து, பொங்கலிட்டு பூஜை செய்து, காளிங்கராயருக்கு மனமுருகி நன்றி செலுத்தும் விழாவாக கொண்டாடி வருகின்றனர்.

இதைத் தான் சங்க இலக்கியம்

**புறநானூறு 359. நீடு விளங்கும் புகழ்!**

பாடியவர்: கரவட்டனார்.

பாடப்பட்டோன்: அந்துவன் கீரன்.

திணை: காஞ்சி.

துறை: பெருங்காஞ்சி.

**வசையும் நிற்கும், இசையும் நிற்கும்;**

**அதனால் வசைநீக்கி இசைவேண்டியும்,**

**நசை வேண்டாது நன்று மொழிந்தும்,**

இறந்த பின்னர் புகழோ, இகழோ நிற்கும். அதனால் நீ பழியை நீக்கிப் புகழைத் தேடிக்கொள். ஆசை வேண்டாம். நல்லதைச் சொல்

நமது கண்ணதாசனும் வேட்டைக்காரன் திரைப்படத்தில்

**மானம் பெரியது என்று வாழும் மனிதர்களை**

மான் என்று சொல்வதில்லையா

தன்னை தானும் அறிந்து கொண்டு ஊருக்கும் சொல்பவர்கள்

தலைவர்கள் ஆவதில்லையா

மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு

மாலைகள் விழவேண்டும் ஒரு

மாசு குறையாத மன்னவன் இவனென்று

போற்றிப் புகழ வேண்டும்

உன்னை அறிந்தால்..

நீ உன்னை அறிந்தால்

உலகத்தில் போராடலாம் ஆஆ..

உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்

தலை வணங்காமல் நீ வாழலாம்



**PR.C.Sethuraman**
(Master of Banking Management)
Nomura (Investment Banking Operations),
Mumbai
Native: Valayapatti

Wishing

'Mumbai Nagarathar'


Magazine all success



With Best Compliments from

Interport Clearing Services,

Mumbai



# குறுக்கெழுத்துப் போட்டி

## செட்டிநாட்டு ஊர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | ■ | ■ |
| | | | | | | 2 | ■ |
| 3 | | | | | | | |
| | ■ | 4 | | | | | |
| | | | | 5 | | | |
| | | | | | 6 | | |
| ■ | ■ | | | | | 7 | |
| | | | | | 8 | ■ | ■ |

## விடைகளுக்கான குறிப்புகள்

(எழுத்துக்களின் எண்ணிக்கை அடைப்பு குறிக்குள்)

### இடமிருந்து வலம்:

1. 'தென் திருப்பதி ' என அழைக்கப் படும் ஊர்.(6)

3. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பிறந்த ஊர்.(8)

4. 10 ரூபாக்கு சாப்பாடு போடும் செட்டிநாட்டு ஊர்.(4)

### மேலிருந்து கீழ்:

1. அரியின் பெயரால் துவங்கும் ஊர். தென் திருப்பதி அல்ல. (5)

2. வள்ளல் அழகப்பரின் சொந்த ஊர். (5)

### வலமிருந்து இடம்:

2. கோட்டையூரை அடுத்த அழகான ஊர் (6)

(5)கருப்பண்ண சாமி கோவில் கொண்டுள்ள செட்டிநாட்டு ஊர். (5)

6. மலையாண்டி கோவில் கொண்டுள்ள ஊர் (6)

7. மஞ்சுவிரட்டுக்குப் பேர் பெற்ற செட்டிநாட்டு ஊர் (5)

9. வரலாற்றுச் சிறப்பு மிக்க பூக்கற்கள் தரும் ஊர் (6)

### கீழிருந்து மேல்:

8. அழகப்பா பல்கலை அமைந்துள்ள ஊர் (5)

9.நீதி அரசர் சொக்கலிங்கத்தின் சொந்த ஊர் (5)

## விடைகள்:

### இடமிருந்து வலம்:

1. அரியக்குடி
3. மகிபாலன்பட்டி
4. கல்லல்

### வலமிருந்து இடம்:

2. கோ.அழகாபுரி
5. ராங்கியம்
6. வலையபட்டி
7. சிராவாயல்
9. ஆத்தங்குடி

### மேலிருந்து கீழ்:

1. அரிமளம்

2.கோட்டையூர்

### கீழிருந்து மேல்:

8.காரைக்குடி

9. ஆறாவயல்.

– திருமதி சொர்ணவல்லி மெய்யப்பன்



இவர் ஓர் இல்லத்தரசி. ‘தென்னரசு’ அச்சிதழில் கட்டுரை, துணுக்குகள், குறுக்கெழுத்துப் புதிர்கள், சமையல் குறிப்புகள் எழுதியுள்ளார். ‘தென்னரசு’ இதழ் தயாரிப்புக் குழுவில் பணியாற்றியுள்ளார்.

ARVIND
CHETTINAD SNACKS

# செட்டிநாடு ஸ்நாக்ஸ்






பாரம்பரிய சுவையில் பலகார வகைகள்

சுபகாரியங்களுக்கு ஆர்டரின் பெயரில் செய்து தரப்படும்.

**Mfrs :**
South India Agro Food Industries, A-38, Sidco Industrial Estate, Kappalur,
Madurai - 625 008. PH : 0452 - 2489596, +91 9360026920
E-Mail : thinna37@yahoo.co.in

**Our Branches :**
Madurai - +91 93451 26920 | Karaikudi - +91 84899 42190
Devakottai - 9486486423

ARVIND
CHETTINAD SNACKS
www.arvind-snacks.com



# Malai Sandwich

## Ingredients

1. Cow Milk - 2 litres. (Use fresh milk like bhaiya milk and not packet milk)
2. Lemon juice-2 tbsp, diluted with 4 tbsp of water.
3. Sugar- 1 tbsp
4. Corn flour- half tbsp
5. For Sugar syrup- Two cups of sugar and 7 cups of water
6. mawa 200 gms and 2 tbsp of rose syrup (like ROOH AFZA) for stuffing. Instead of rose syrup any other flavoured syrup can be used as per taste.
7. Pista- cut nicely for decoration
8. Silver foil (vark)

## Process

1. Boil the milk and cool it for 5 minutes. Add diluted lemon juice little by little and mix well.
2. The milk will curdle. keep it aside for 5 minutes.
3. Use cloth and filter the curdled milk.



Remove the water completely by squeezing the cloth. Your paneer is ready.

4. Take this paneer and wash with fresh water.
5. Now drain the  water.
6. Add sugar, corn flour and mix well in a clean Turkish cloth (preferably Turkish towel) and mash well with the help of palm… should become like chapatti atta without any lumps.
7. Make the above into small balls without any cracks. (the rasagulla size)
8. Meanwhile, make the sugar syrup. Add sugar in boiling water and let the sugar fully dissolve in it. keep in high flame.
9. Make the balls flat (for the sandwich) and

put them one by one in the boiling syrup.

10. Cover the utensil with a lid and allow it to boil for 15 minutes.
11. Now add 5 or 6 tablespoons of chilled water in the vessel and switch off the flame.
12. Allow it to cool for 2 hours.
13. Then remove the flat rasagulla and slice it in the middle with a knife.
    (Note: It should remain as a single piece and should not become two slices.)
14. Now make the stuffing by pouring rose syrup in mawa and mix well.
15. Place the mawa in the middle of the flat rasagulla.
16. Keep the sandwich in the fridge for 3 or 4 hours.
17. Decorate it with silver foil (vark) and pista.

**Now Malai Sandwich is ready to serve.**



**Jayanthi Palaniappan**
Native: Okkur
Vairavan Kovil
Interested in Crafts and Cooking



LANDSCAPE
AND
GARDENING









KANNAGI GANESH KUMAR - 9600126999

For Residential, Commercial and Industrial
Establishments - CHENNAI

# BEETROOT VADA

## Ingredients:

Beetroot normal size - 2(grated)

Chana dal- 3/4 cup

Toor dal - 1/2 cup

Dried red chilli- 8

Cumin seeds (Jeera)-1 tsp





Aniseed (saunf)-1 tsp

Onion -1(finely chopped)

Curry leaves- few (chopped)

Coriander leaves – few (Chopped)

Salt - 2 tsp

Oil - 2 cups

**Method:**

Soak both dals in water for 1 hour. Drain, grind coarsely adding dried red chillies, cumin, ani seeds, hing and haldi.

Mix chopped onions, grated beetroot, coarsely ground dal, curry leaves, coriander leaves and salt.

Heat oil in a Kadai. Make vada and deep fry.

Drain the oil and serve with rice and curry.




Mahalakshmi Manickam B.A.(Socio.)
Native : Devakottai



Interviewed by
Muthulakshmi Palaniappan(Kanna)

# Art spot

by budding artists of BNSCA






**S.V.Hariharan**
Standard: Grade X
Native: Rangiam
Art- Mandala art (Lord Muruga)





**Thanishka Ayyappan**
Standard : Sr.kg
Native: Kulipirai
Art: Clay moulding






**Deivanai Valliappan**
Standard: Pre school
Native-Devakottai
Art: Acrylic on canvas







**Aarush Palaniappan**
Standard: Grade 7
Native: Kandanur
Art: Save the Earth using Oil pastels





**Ramanathan Ayyappan**
Standard: Grade 5
Native: Kulipirai
Art: Acrylic painting on handkerchief






**Vivaan Muthuganesh**
Standard: 4th Grade
Native: Paganeri
Art: Cat - Apocalypse & DinoRoar
Freehand drawing using color pencils






**A.Sai Thirunilai**
Standard : Grade 1
Native : Keelasevalpatti
Art: Hello kitty with colour pencils

Coordinated by
Muthulakshmi Palaniappan (Kanna)
Interior designer, Artist, Teacher
Contact Number: 99676 50475



# Mandala Art








**Teaching Mandala Art Online Class**

Contact Details :

Mrs. Seetha Ramu ( Thane ):

9962478240

Native : Kothamangalam






**Mrs. Seetha Ramu**
( Thane, Mumbai )



# Being a Student

Under the blessings of Sunshine and The Teacher,
We get to learn and seek.
We sway the teachers mood,
Angry or joyful, sad or pleased.

The ending hours of school prompt us to go home and have fun,
My eyes close on the softest couch when I am home.
Then I have to prevail to decipher the codes,
Followed by the partly engrossing homework done by everyone.

In Spite of interest or boredom,
Our soul is always awakened in the class.
Swallowing the abstract and theories,
Though sometimes not understood.

We learn with lots of mistakes and mischiefs,
We aspire to get chances again and again.
Teachers give us chances with encouraging pats,
Which builds confidence in us to stand up again.



**Vrishan Gandhi**
8th std,
Hiranandani Foundation School,
Parents - Gandhi Arumugam and
Lakshmi Gandhi.
Native - Thekkur



# சுவிட்சர்லாந்தில் ஒரு திகில் நிறைந்த பயணம்

சுவிட்சர்லாந்தில் நாங்கள் இரவில் பயணித்த கதை. 2013 ஆம் ஆண்டு நானும் என் கணவரும் நெதர்லாந்து சென்றிருந்த பொழுது அங்கிருந்து எங்கள் மகனும் மருமகளும் எங்களை ஸ்விட்சர்லாந்திற்கு அழைத்துச் சென்றனர். சுவிட்சர்லாந்தில் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையினை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எங்கள் மகனும் ஜுரிச் நகரத்தின் மலைப்பகுதியில் உள்ள கிராமத்திற்கு (AIR BNBமூலமாக) வாடகைக்குப் பிடித்த ஒரு வீட்டிற்கு எங்களை அழைத்துச் சென்றான்.

மாலைப்பொழுது மிகவும் அழகாகவும் ரம்யமாகவும் இருந்தது. இயற்கையை ரசித்தபடி சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது வழியில் மக்களின் விவசாய முறைகளையும், வெயில் காலமாக





இருந்தபடியால் அங்கு இருக்கும் மக்கள் தங்களது கால்நடைகளுக்கு தேவையான புல்லை, பெரிய பெரிய இயந்திரங்களைக் கொண்டு வெட்டி படுக்கையாக சுற்றி அதை பதப்படுத்தும் இடங்களில் வைத்துக் கொண்டிருந்தனர். செல்லும் வழி எல்லாம் மரக்கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒருபுறம் இயற்கையாக மஞ்சள் மலர் படுக்கை போல் இருந்த புல்வெளி. அந்த மஞ்சள் பூக்களின் அழகைப்பார்த்து நான் அருகில் நின்று புகைப்படம் கூட மிகவும் விரும்பி எடுத்துக் கொண்டேன்.



மிகவும் அழகான ஒரு ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றாய். எங்கள் மனது மிகவும் ஆனந்தம் அடைகின்றது., என்று நான் என் மகனிடம் அவனை புகழ்ந்து பேசிக் கொண்டு வந்தேன்.

ஐந்து மணி இருக்கும் (மாலை 5 மணி). நேரம்செல்லச் செல்ல நாங்கள் எடுத்திருந்த வீடு வருவதற்கு நீண்ட நேரம் ஆகிக்கொண்டே இருந்தது .பாதையோ மிகவும் நீண்டதாக இருக்கிறது. மலைப் பாதையும் கூட .இரு பக்கம் இருந்து பெரிய பெரிய மரங்கள் பள்ளத்தாக்கில் இருந்து மிக உயரமாக தெரிகின்றன. மாலை 5 மணிக்கே" fog" என்று சொல்லக்கூடிய பனிப்புகை படர தொடங்கி விட்டது. இருள்சூழ்ந்து விட்டது. பக்கத்தில் ஒரு ஐந்து அடி தூரத்திற்குதான் நாங்கள் செல்லும் காரின் உடைய வெளிச்சம் தெரியும். எதிரில் வரும் மிருகங்களையோ மனிதர்களையோ எதுவாக இருந்தாலும் பார்க்க இயலாது. யாரும் திருடர்கள் வந்தாலும் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. மருமகளும் வழியை ஜிபிஎஸ் இல் பார்த்து ,சொல்ல சொல்ல ,மகனும் காரை ஓட்டிக்கொண்டு செல்கின்றான் .இரு பக்கமும் நெடிதுயர்ந்த மரங்கள். எதிரில்கும்மிருட்டு .வீடும் இன்னும் வரவில்லை. வழியிலே விளக்கு வெளிச்சம் தெரிந்து சென்றோமேயானால் இன்னும் திரும்பிச் செல்ல வேண்டும், இன்னும் திரும்பிச் செல்ல வேண்டும் என்று வழிகாட்டி கூறிக் கொண்டே இருக்கிறது .அந்த ஒரு சூழ்நிலையில் சுற்றும் முற்றும் மிகவும் நிசப்தம். வெளியிலும் பயங்கர நிசப்தம். அப்பொழுது "ஆத்தா !உமையாத்தா! தாயே! என்று அருகில் இருந்து குரல் கேட்கிறது . என் கணவர் மிகவும் கலக்கத்துடன் கை கூப்பி வேண்டிக் கொண்டிருக்கின்றார். எப்பொழுதும்


நம் கணவர் மீது தானே நமக்கு கோபம் வரும் .நாம் கோபம் செலுத்தக்கூடிய இடமும் அதுதான். ஏங்க நீங்க தம்பியின் பிளானைப்பார்த்து இருக்க கூடாதா? தம்பிதான் பிளான் பண்ணி இருந்தான் என்றாலும் , அதை வாங்கி பார்த்திருக்கக் கூடாதா ?

அவனே எல்லாத்தையும் பாத்துக்கட்டும் என்று விட்டுட்டீங்களே!தம்பியும் சின்னப்பிள்ளை தானே?(அப்பொழுது எங்கள் மகனுக்கும் 29 வயது. கல்யாணமும் ஆகிவிட்டது.) என்று செட்டியாரை கோபித்துக் கொள்கிறேன் நான். ஏதோ எங்கள் செட்டியாரும் சுவிட்சர்லாந்திலேயேஇருந்து, பிறந்து வளர்ந்து அனைத்து வழிகளையும், பாதைகளையும் தெரிந்து வைத்திருக்கின்றார்கள் என்று நினைத்து பேசுகிறேன். எங்கள் செட்டியாரும் மகனைப் பார்த்து தம்பி மெதுவாகவே போப்பா என்று சொல்கிறார்கள். இப்பொழுது மருமகள் மெல்லிய குரலில்"பத்துல தான் போறாங்க மாமா" என்று சொல்கிறார். திகில் நிறைந்த அந்தப் பயணம் மேலும் 15 நிமிடங்கள் நீடிக்கிறது.



ஒரு வழியாக மலை உச்சியில் உள்ள அந்த வீட்டை நாங்கள் சென்றடைகிறோம். பக்கத்தில் இருக்கும் வீட்டில் நாங்கள் பிடித்திருந்த வாடகை வீட்டின் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அதாவது வீட்டிற்கு சொந்தக்காரர்கள். அம்மாவும் மகளும் எங்களுக்கு கதவை திறந்து ,அந்த வீட்டில் இருக்கும் அனைத்து வசதிகளையும் ஒவ்வொன்றாக சொல்லிவிட்டு செல்கிறார்கள். மிகவும் அழகான வீடு. அங்கு என் மகன் முதலில் பார்த்து வியந்தது பாருங்களேன் இவ்வளவு உயரத்திலும் ,மலைக்காட்டிலும்"wifi".(அது 2013 ஆம் ஆண்டு) வீட்டை திறந்து அம்மாவும் மகளும் வீட்டிற்குள் உள்ள "கணப்பு" அதாவது (ஹீட்டர் )உடனே ஆன் செய்தார்கள் .வீட்டின் தரைப்பகுதியில் அடியில் கணப்பு வைத்திருந்தார்கள். உடனே சற்று நேரத்தில் தரையெல்லாம் சூடேற தொடங்கிவிட்டது. அந்த கதகதப்பு அப்போதைய கடும் குளிருக்கு மிகவும் இதமாக இருந்தது.

பயம் தெளிந்த பின் மனது ரிலாக்ஸ் ஆனதும் வயிறு பசியை உணரத் தொடங்கியது. அப்பொழுது இங்கு என்ன கிடைக்கும் என்று அந்த வீட்டுக்காரர்களிடம்எல்லாம் கேட்ட பொழுது, அவர்கள் இருவரும் அழகாக இரண்டு லெதர் ஷூக்களை கால்களில் மாட்டிக்கொண்டு எதிரில் இருந்த அவர்களது மாட்டு கொட்டகைக்குள்சென்று, (அதுவும் ஹீட்டர் போடப்பட்டிருந்தது). மிகவும் அருமையான பால் கரந்து கொண்டு வந்து எங்களிடம் கொடுத்தார்கள். நாங்கள் ஜெனிவாவில் இருந்து காபி பொடி வாங்கிக் கொண்டு சென்றிருந்தோம். ஆனால் சர்க்கரை இல்லை .அவர்கள் அவரிடம் இருந்த சர்க்கரையில் சிறிது கொடுத்தார்கள். இன்று இதை ஏற்றுக் கொள்ளுங்கள். நாளை கீழே செல்லும்பொழுது அனைத்தையும் வாங்கிக்



கொண்டு வந்து விடுங்கள் என்றார்கள். அந்த ஒரு கிராமத்தில் மலை உச்சியில் மிகவும் அருமையான புதுப்பால் காப்பி போட கிடைத்தது என்பதில் எங்களுக்கு விவரிக்க இயலாத ஆனந்தம்.

மாடுகள் மாட்டுக் கொட்டிலில் இருக்கின்றன என்பதை அவற்றின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணியின் வாயிலாக தெரிந்து கொண்டோம். அதிக குளிரின் காரணமாக கொட்டகை முழுவதும் அடைக்கப்பட்டு இருப்பதால் மணியோசை கொண்டு தான் நாம் மாடுகளை அறிந்து கொள்ள முடியும். நாங்கள் கையுடன் எடுத்துச் சென்றிருந்த பாஸ்தாவை சமைத்து சாப்பிட்டு காப்பியும் குடித்து முடித்ததும் களைப்பாறி இளைப்பாறினோம்.

மெதுவாக எங்கள் மகனும் சொன்னான் "அப்பா நான் ரேடோஷிடம் கேட்டேன் (அவனது செர்பியா நாட்டு நண்பன். அவனுக்கும் உலக விஷயங்கள் அனைத்தும் தெரியும்) அவன் சொன்னான் “switzerland Roads are forgivable” என்று (சுவிட்சர்லாந்தின் ரோடுகள் நம்மை அச்சுறுத்துவது போல

இருந்தாலும் அவற்றால் எந்த துர்விளைவுகளும் நேர்வதில்லை. எப்படி இருந்தாலும் மன்னிக்கக் கூடியதாகவே அவை இருக்கின்றன என்பதே அதன் அர்த்தம்) அதனால் தான் நானே தைரியமாக காரை ஓட்டிக்கொண்டு வந்தேன் என்றான். மறுநாள் காலை எங்கள் மருமகள் 60 கிலோ மீட்டர் ஸ்பீடில் இறங்கி விட்டாள். அவளும் மிகவும் அழகாகவும் நன்றாகவும் கார் ஓட்டுவாள். அப்பொழுது தான் தெரிந்தது நாங்கள் பள்ளத்தாக்கில் இருந்து மரங்கள் எழும்பி மேலே நிற்கின்றன என்று அந்த இருட்டில் நினைத்துக் கொண்டிருந்த சுவிட்சர்லாந்தினுடைய ரோட்டின் இரு பக்கமும் சம வெளிகள் தான் இருந்தன. ஆனால் கும் இருட்டு என்கிற படியால் மனம் எதையெதையோ கற்பனை செய்து கொண்டு விடுகிறது. அந்த பயணத்தை இன்று நினைத்தாலும் மனதில் ஒரு திகில் இருக்கிறது.



**திருமதி. பாப்பா முத்து வீரப்பன்**

நவி மும்பை. சொந்த ஊர்: பனையப்பட்டி.
தமிழில் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவது பிடிக்கும்.
ஹிந்தியும் எழுத, படிக்க தெரியும். ஹிந்தி விஷாரத்..
உத்திராரத், கற்று தெரிந்த ஹிந்தி டீச்சர்.

# இராவதி

## நதிக்கரையோரம்

இக்கதையில் வரும் அனைத்து கதாபாத்திரங்களும் கற்பனையே, யாரையும் குறிப்பிடுவன அல்ல. இக்கதையில் வரும் சில வரலாற்று நிகழ்வுகள் 'The Chettiars in Burma' (Sean Turnell - 2005) எனும் ஆய்வு கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.

**அத்யாயம் 6: புதுக்கடையின் முதலும், நடப்பு வட்டி விகிதமும்**

**வருடம் - 1875**

"இந்த புதுக்கடைக்கான முதல் எவ்வளவு போட்டு ஆரம்பிக்கலாமுனு ஏதாவது யோசனை இருக்காண்ணே?" என்றான் ராமநாதன்.

"நாம் எப்போதும் பின்பற்றுவது partnership model தானே ராமநாதா! என்னுடைய முதல் பணமாக ரூ. 5,000/ எடுத்து வைத்துள்ளேன். உனது இரண்டு மாத ரங்கூன் பயிற்சிக்கு பின்னர், ப்யபோங் கடையில் சேர்ந்த முதல்





மாதத்தில், உன்னுடைய முதல் பணமாக ரூ. 5,400/ வரவு வைத்துக்கொள்வோம்." என்றார் விஸ்வநாதன்.

"நான் இப்போதைக்கு அவ்வளவு தொகை எடுத்து வரவில்லையே அண்ணே!"

"நீ அத்தொகையை உன் கையிலிருந்து எடுத்து முதலீடு செய்ய வேண்டும் என்று அவசியமில்லை.நீ ப்யபோங் சென்றடைந்தவுடன் உனது மூன்று வருட advance salary ஆக ரூ. 5,400/ வழங்கப்படும். அதை வைத்து நீ முதலீடு செய்யலாம். உனது மாத சம்பளத்தை ரூ. 200/ என்று வைத்துக்கொள். அதில் ரூ. 50/ உனது மாத செலவுகளுக்கு என்று கொடுக்கப்படும். Advance salaryயை சரிசெய்ய மாதம் ரூ. 150/ பிடித்தம் செய்யப்படும்.

மூன்று வருடம் கழித்து, நீ ஊருக்கு செல்லும் போதோ, அல்லது சொந்தக் கடை தொடங்கும்போதோ, இந்த

முதலீடை நீ பயன்படுத்திக் கொள்ளலாம்."

"இது ஒரு நல்ல கோட்பாடு, அண்ணே! எனக்கு முழு சம்மதம். This will ensure both of us have skin in the game" என்றான் ராமநாதன்.

“Absolutely Right! This is the plan for our initial equity contribution. Going forward, depending upon the requirement, we can raise debt from some European banks like Chartered Bank (or) money from larger chettiar firms.”

"சரி அண்ணே! நாம் வழங்கும் கடன்களின் வட்டியை எப்படி தீர்மானிக்கணும்?"

"நன்றாக கேட்டாய், ராமநாதா! நான் முன்பு கூறியதைப்போல, நம் இனத்தவருக்கு போட்டியாக அங்கு பல குடிகளும், இனத்தவர்களும் வட்டிக்கு கடை வைத்துள்ளனர்.

இச்சமயத்தில் வட்டி கூடுதலாய் இருப்பின், எந்த வாடிக்கையாளரும் கடைக்கு வரமாட்டார்கள். ஆதலால் பருவ சூழ்நிலைகளை கருதி, பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கம் ஒவ்வொரு மாதமும் 'நடப்பு வட்டியை' தீர்மானிக்கிறது. இந்த மாத நடப்பு வட்டியை கருதி, நாம் நம் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குகிறோம். " என்றார் விஸ்வநாதன்.

“நல்லது அண்ணே! இன்னும் ஒரு சிறு கேள்வி. இந்த சங்கக் கூட்டம் எங்கு நடைபெற்று, வட்டி தீர்மானிக்கப் படுகிறது என்று தெரியுமா?"

"ஒவ்வொரு தமிழ்த் திங்கள் முதல் தேதியன்று, நமது ரங்கூன் நகர விடுதியில் இரவு கூட்டம் நடத்தப் பட்டு

தீர்மானிக்கப்படுகிறது. இச்சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும். பொதுவாக இக்கூட்டத்தில் எல்லோரும் கடந்த மாத தொழில் நடப்பு விகிதத்தை குறித்து விவாதிப்பார்கள். கடைசியாக, அக்கூட்டத்தின் பெரியோர்களால் நடப்பு வட்டி தீர்மானிக்கப்பட்டு எல்லோருக்கும் தெரிவிக்கப்படும். ஒரு வேளை, ஒரு சிலரால் இக்கூட்டத்தில் பங்கேற்க முடியாமல் போகுமாயின், அவர்களுக்கு இச்செய்தி கடிதம் மூலமும் தெரிவிக்கப்படும். Through this process, we will be able to bring interest rate parity within chetty firms (eliminating competition within our chetty firms) as well as will be able to beat our competitors, in terms of interest pricing".

ஒவ்வொரு சின்னஞ்சிறு காரியத்துக்கு பின்னும், இவ்வளவு திட்டமிடலோடு இயங்கும் பர்மா செட்டி சமூகத்தை எண்ணி வியந்தான் ராமநாதன்.



## Maruthappan Swaminathan (Nerkuppai)

***is a corporate banker by profession and settled in Mumbai with Annapoorna (Spouse) and Saishri (Daughter). He loves to discuss stock markets and movies.***

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

இந்த மின் இதழ் மாதந்தோறும் உலகெங்கும் இருக்கும் நகரத்தார்களைச் சென்றடையும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

கிட்டதட்ட 25,000 முதல் 50,000 நகரத்தார்கள் வரை எளிதாக சென்றடையும். ஆதலால் இந்த இதழில் உங்கள் நிறுவன விளம்பரங்கள் இடம் பெற்றால் அது பல ஆயிரக்கணக்கான நகரத்தார்களுக்கு உடனடியாக சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு பக்கம் விளம்பரத்திற்கான கட்டணம் - ரூபாய் 600. ஒரு வருடத்திற்கு, 12 இதழ்களுக்கான விளம்பர கட்டணம் ரூபாய் 6000.

## தொடர்பிற்கு

contact.mumbainagarathar@gmail.com